**கவனிக்க.**-2022.05.13 ஆந் திகதிய 2280 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

**கவனிக்க.**-2022.05.20 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி VI இல் பொலநறுவை மாவட்டத்துக்குரிய நீதாசன வலயங்களின் 2022 ஆம்ஆண்டுக்கான யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றன.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2281 - 2022 මැයි මස 20 වැනි සිකුරාදා - 2022.05.20

2281 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 796 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 800 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 797 | ஏல விற்பனைகள் | 801 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 799 | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) சமரவீர மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2022, ஏப்பிறல் மாதம் 29ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) இலங்கை மின்சாரம் (திருத்தம்) சட்டமூலம் 2022, ஏப்பிறல் மாதம் 29ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, யூன் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, மே மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.


795 - B 082347 -543 (2022/05)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் புகையிரத சேவைகள்

விலைமனுக்களுக்கான அழைப்பு

PROCUREMENT FOR THE SUPPLY OF 5,000 Nos. LESS HIGH CONCRETE SLEEPERS TO HAPUTALE YARD AND 5,000 Nos. LESS HIGH CONCRETE SLEEPERS TO HEEL -OYA YARD TO SUIT EN 45E 1 RAILS FOR CHECK RAILED TRACK IN UPPER DISTRICT. SRILANKA RAILWAYS - IFB NO. - SRS. F. 7831

1. இலங்கை, புகையிரத சேவைகளின் மேல் மாவட்டத்தில் CHECK RAILED TRACK இற்கான EN 45E1 தண்டவாளங்களுக்கு பொருந்தும் தன்மையில் அப்புத்தளை திறந்த வெளிக்கு பாரம் குறைந்த கொன்கிறீட் 5,000 எண்ணிக்கையான சிலீப்பர்களையும் ஹீல் ஒய திறந்த வெளிக்கு பாரம் குறைந்த கொன்கிறீட் 5,000 எண்ணிக்கையான சிலீப்பர்களையும் வழங்குவதற்காக உள்ளூர் உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து கொழும்பு, இலங்கை புகையிரத சேவைகளின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார்.

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பெற்றுக் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் 2022.04.29 ஆந் திகதியிலிருந்து 2022.05.23 ஆந் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப.3.00 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

பிரதி பொது முகாமையாளர் (பெறுகை),
புகையிரத பெறுகை உப திணைக்களம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.
தொலைபேசி இலக்கங்கள் : 94(11) 2438078 அல்லது 94(11)2436818.

தொலைநகல் இலக்கம் : 94(11) 2432044.
மின்னஞ்சல் : srs.sir.@ gmail .com
இணையத்தளம் : www.railway.gov.lk

4. கடந்த (05) வருடங்களில் விலைமனுதாரர் 5,,000 எண்ணிக்கைக்கு மேலான கொங்கிறீட் சிலீப்பர்களை இலங்கை புகையிரத சேவைகளுக்கு வழங்கியிருத்தல் வேண்டும் அல்லது முன்தாயாரிக்கப்பட்ட கொங்கிறீட் விட்டங்களை 50 மில்லியன் ரூபாவிற்கு மேலாக வழங்கியிருத்தல் அல்லது 500 மில்லியன் ரூபாவிற்கு மேலான பெறுமதியுள்ள கொங்கிறீட் தூண்களை வழங்கியிருத்தல் வேண்டுமென்பதுடன் அவற்றிற்கான விலைப்பட்டியல்களின் பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. 2022.04.29 ஆந் திகதியிலிருந்து 2022.05.23 ஆந் திகதி வரையும் பி.ப. 3.00 மணி வரையும் மீளளிக்கப்படாத பெறுகை கட்டணமாக 27,500 ரூபாவை மாத்திரம் செலுத்திய பின்னர் இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத பெறுகை உப திணைக்கள அலுவலக முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள அனைத்து விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

6. அனைத்து விலைமனுக்களும் விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையின் தொகையானது 1,500,000 ரூபாவாகவிருப்பதுடன் நிபந்தனையற்ற அங்கீகரிக் கப்பட்ட வங்கியொன்றினால் உத்தரவாதமாகவும் இலங்கையில் செயற்படுவதும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கி யொன்றாகவுமிருத்தல் வேண்டும்.

7. விலைமனுக்களை கீழேயுள்ள முகவரியில் 2022.05.24 ஆந் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டுமென்பதுடன் விலைமனுக்கள் அவகைளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் . தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக்குழு, ( உயர் மட்டம்),
பெறுகை உப திணைக்களத்தின் அலுவலகம்,
இலங்கைப் புகையிரத சேவைகள்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10.

Ref No. SRS / F. 7831

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு
( உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

05- 140

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

பெறுகை அறிவித்தல்

PROCUREMENT FOR THE SUPPLY OF BASE PLATES, FISH PLATES, COACH SCREWS AND BOLTS & NUTS TO SRILANKA RAILWAYS PROCUREMENTS No. SRS/F.7823

01. கீழே காட்டப்பட்டவாறு சர்வதேச போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் அடிப்படையில் இலங்கை புகையிரத சேவைகளுக்கு OF BASE PLATES, FISH PLATES. COACH SCREWS AND BOLTS & NUTS ஆகியவற்றின் வழங்கல் பெறுகைக்காக வெளிநாட்டு உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்களிடமிருந்து இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக்கொள்வார். விலைமனுதாரர் அவர்களின் விலைமனுக்களை நேரடியாக அல்லது இலங்கையில் பதிவு பெற்ற அற்றோணித்தத்துவத்தையுடைய தர அங்கீகாரம் பெற்ற முகவரொருவரினூடாகவும் சமர்ப்பிக்கலாம்.

| *Itm No.* | *Description* | *Qty.* |
|---|---|---|
| 01. | Base Plates 90(A) Lbs | 5,000 Nos. |
| 02. | Fish Plates 90(A).(04 holed) | 4,000 Nos. |
| 03. | Stud Bolts with Nuts | 5,000 Nos. |
| 04. | Coach Screws | 20,000 Nos. |
| 05. | Fang Bolts & Nuts- 8 1/2"x3/4" | 10,000 Nos. |

2. 2022.06.15 ஆந் திகதியன்று (இலங்கை நேரம்) பி.ப. 3.00 மணி வரையும் 10,250 இலங்கை ரூபாவை மாத்திரம் அல்லது இலகுவில் மாற்றக்கூடிய நாணயத்தில் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக செலுத்திய பின்னர் பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து அல்லது வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதுவராலயங்களிலிருந்து பெறக்கூடிய படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. 2022.06.16 ஆந் திகதியன்று இலங்கை நேரம் பி.ப.1.30 மணிக்கு விலைமனுக்கள் மூடப்படும்.

4. விலைமனுதாரர் அவர்களின் விலைமனுக்களின் ஒரு பகுதிக்காக 400,000 ரூபா பெறுமதியான அல்லது இலகுவில் மாற்றக்கூடிய நிகரான தொகைக்கான விலைமனுப்பிணையொன்றை வழங்கல் வேண்டும். உற்பத்தியாளர்கள்/வழங்குநர்கள் சர்வதேச போட்டிரீதியிலான அமைப்பினால் வழங்கப்படும் செயற்பாட்டு சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும். அனைத்து அம்சங்களும் ஒன்றாகவே மதிப்பீடு செய்யப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்படும்.

5. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரின் அலுவலகத்தில் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுன்றனர்.

6. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஒன்றில் கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக்குழு, (உயர் மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்,
பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை),
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10.

7. விலைமனுக்கோரல் ஆவணங்கள் பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளரின் அலுவலகத்தில் இலவசமாக பரீட்சிக்கலாம்.

தொலைபேசி இலக்கங்கள் : 2438078 அல்லது 2436818.
தொலைநகல் இல. . : 2432044.
மின்னஞ்சல் : tender2@railway.gov.lk
இணையத்தளம் : www.railway.gov.lk

தலைவர், (உயர் மட்டம்),
திணைக்கள பெறுகைக் குழு
இலங்கை புகையிரத சேவைகள்.

குறிப்பீட்டு இல.: SRS/ F.7823

05- 141

---

## பொருட்கள் விற்பனவும் பிறவும்

*திருத்தம்*

**மாவட்ட /நீதிவான் நீதிமன்றம் - பொத்துவில்**

பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

2022.05.06 ஆந் திகதிய 2279 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரிகை மூலம் வெளியிடப்பட்ட பகிரங்க ஏல விற்பனையானது 2022.05.14 ஆந் திகதி தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெறவில்லை என்பதனை அறியத்தருகின்றேன்.

மேலும் , குறித்த ஏல விற்பனையானது எதிர்வரும் 2022.05.28 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றேன்.

ஏ.சீ. றிஸ்வான்,
மாவட்ட நீதிபதியும் நீதிவானும்.

மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்,
பொத்துவில்,
2022.05.17.

05- 165

---

## மூதூர் மாவட்ட/நீதிவான் நீதிமன்றினால் அரசுடமையாக்கப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை -2022.05.28

01. மூதூர் மாவட்ட/நீதிவான் நீதிமன்றினால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அரசுடமையாக்கப்பட்ட, உரிமை கோரப்படாத பொருட்களின் ஏல விற்பனை 2022.05.28 ஆந் திகதியன்று காலை 9.00 மணியளவில் நீதிமன்ற வளாகத்தில் நடாத்தப்படும்.

02. விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களினை மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்பதாக பார்வையிடலாம்.

03.பகிரங்க ஏலவிற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பொருட்களிற்கு உரிய விலை கிடைக்கப்பெறாதவிடத்து ஏல விற்பனையிலிருந்து மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

04. விற்பனை செய்யப்பட்ட பொருட்களுக்கான பணத்தை உடன் செலுத்தி உடனடியாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும். எல்லாக் கொடுப்பனவுகளும் காசாகவே செய்யப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

05. பொருட்களைக் கொள்வனவு செய்வோர் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய அடையாள அட்டை கொண்டு வர வேண்டும்.

| தொ. இல. | வழக்கு இல. | விற்பனை செய்யப்படவுள்ள பொருட்கள் | அளவு |
|---|---|---|---|
| 1. | - | ஆற்று மணல் | 60 கியுப் |
| 2. | AR/380/21 | படகு ( Fiber boat) | 1 |
| 3. | AR/380/21 | ஒட்சிசன் சிலிண்டர் | 3 |
| 4. | AR/380/21 | நீச்சல் சப்பாத்து | 1 சோடி |
| 5. | AR/380/21 | நீச்சல் கண்ணாடி | 1 |
| 6. | AR/380/21 | 20 லீட்டர் மண்ணெண்ணெய் கேன் | 1 |
| 7. | AR/380/21 | கையடக்கத் தொலைபேசி ( சிட்டி செல்) | 1 |

எச். எம். தஸ்நீம் பௌசான்,
மாவட்ட நீதிபதியும் நீதிவானும்.

மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்,
மூதூர்,
2022.05.09.

05- 137

# ஆய விற்பனையும் குத்தகையும்

## மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் கோட்டைமுனை TT- 2 ஆம் இலக்க கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை

*2022 யூலை – 2023 யூன்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1982 ஒகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விற்பனை செய்யும் நிபந்தனைகளுக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேசத்திற்குட்பட்ட கோட்டைமுனை கள்ளுத்தவறணைக்கான 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2023, யூன் மாதம் 30ஆந் திகதி வரையுள்ள கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ்க் குறிப்பிட்ட திகதி, நேரம் வரை மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி திறக்கப்படும் போது கேள்விதாரர்கள் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் கேள்விச் சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

1. கேள்வி விண்ணப்பங்களின் பேரில் ஐந்நூறு ரூபா ( ரூபா500) பணத்தை மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் என்ற பெயரில் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதியையும், பெறுமதிச்சான்றிதழின் பிரதியையும் சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பப்படிவத்தை பெறமுடியும். இக்கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும்போது இப்பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். கேள்விப்பத்திர விநியோகம் 2022.05.20ஆந் திகதி முதல் 2022.05.30 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணியுடன் முடிவடையும்.

2. அந்தந்த பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் பெறுமதிச் சான்றிதழானது கேள்விதாரர் விண்ணப்பிக்கும் தொகையில் 15% வீதத்திற்கு குறைவாக இருத்தலாகாது. இப்பெறுமதிச் சான்றிதழின் மூலப் பிரதி கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் இப்பெறுமதிச் சான்றிதழுடன் காணிப்பதிவாளரினால் வழங்கப்படும் காணி வரலாற்றுச் சுருக்கப்பிரதியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ( இது கேள்விப்பத்திரம் விநியோகிக்க ஆரம்பிக்கப்பட்ட தினத்திற்குப் பிந்திய தினத்தில் பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும்.)

3. கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் கடித உறையினுள் தங்களால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களின் பிரதிகளை இன்னுமொரு கடித உறையினுள் இட்டு அதனை மூடி விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் பிழையாக நிரப்பப்பட்டிருந்தாலும், மேற்படி 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் இணைக்கப்படாமலிருந்தாலும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்களுக்கு செலுத்திய பணத்தை திருப்பி எடுக்க விரும்பினால் தங்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் நாளில் இருந்து இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரங்களை பூரணப்படுத்தாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் திருப்பிச் சமர்ப்பிப்பின் அக்கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

6. தவறணை தற்போது இருக்கும் இடத்தில் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

7. பதிவு செய்யப்பட்ட தெங்கு, பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இந்தக் குத்தகை விற்பனையில் கலந்து கொள்வதாயின் சங்கம் அமைந்திருக்கும் பிரதேசத்திற்குரிய கள்ளுத் தவறணைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் சங்கம் தற்போது இயங்குகின்றமை பற்றியும் சங்கத்தால் கள்ளுத்தவறணையை குத்தகைக்கு எடுத்து நடாத்தக்கூடிய ஆற்றல் உள்ளமை பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே குத்தகை விற்பனைக்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்படும். ( நிதி அமைச்சின் 01/2012 ஆம் இலக்கம் கொண்ட 2012/01/05 ஆம் திகதிய சுற்றுநிருபத்திற்கமைவாக காணப்படுதல் வேண்டும்.)

8. ஏனைய விபரங்களை மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வ. வாசுதேவன்,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
மண்முனை வடக்கு,
மட்டக்களப்பு.

**அட்டவணை**

கள்ளுத் தவறணை அமைய வேண்டிய இடம்

| தவறணை அமைய வேண்டிய இடம் | தவறணை இலக்கம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியும் நேரமும் - திகதி | நேரம் |
|---|---|---|---|
| மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குள் | TT No. 2 | 2022.05.30 | பி.ப. 2.30 மணி |

குறிப்பு.- 1. கேள்விச் சபை 2022.05.30 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்குக் கூடும்.

2. விற்பனை தினத்தில் தகுதியான குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்படாது விட்டால் மறு விற்பனை 2022.06.06 ஆந் திகதி பி.ப. 2.30 மணிக்கு நடைபெறும்.

5-169

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

வேயங்கொடை, உதுவம், போகஹவத்த, இல. 98 என்ற இடத்தில் குடியிருக்கும் ரதம்பல அப்புஹாமிலாகே உஷானி நிஸங்சலா குமாரசிறி (தே.அ.அ.இல. 945740337V) ஆகிய நான், 2018, ஒற்றோபர் மாதம் இருபத்தி இரண்டாம் திகதி கம்பஹா பிரசித்த நொத்தாரிசு திருமதி எம். பீ. எம். ஷிவந்திகா சிறிவர்தன என்பவரால் எழுதி உறுதி செய்யப்பட்ட அற்றோணித் தத்துவப் பத்திர இல. 418 என்ற அற்றோணித் தத்துவப் பத்திரம் மூலம் வேயங்கொட, உதுவம், போகஹவத்த, இல. 98 என்ட இடத்தில் குடியிருக்கும் ரதம்பல அப்புஹாமிலாகே அர்ஜுன குமாரசிறி (தே.அ.அ.இல. 911800306V) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவ அதிகாரத்தை, எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷை யின் பேரிலும் 2022, 05.12 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் உடனடியாக இரத்துச் செய்கின்றேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

ரதம்பல அப்புஹாமிலாகே உஷானி
நிஸங்சலா குமாரசிறி .

05- 135

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

நான், இல. 1176, சுட்டன் கோர்ட், ஓஷாவா,ஒன்டாரியோ, L1H8C7, கனடாவின் ரங்கானி சாதிபிகா சாண்டியாகோ, அனோஷான் அஹங்காமா 2020, நவெம்பர் 30 ஆந் திகதியிட்ட சிறப்பு வழக்கறிஞரால் சான்றளிக்கப்பட்டதை இலங்கையில் உள்ள பொது மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இதன் மூலம் தெரிவிக்கின்றேன். 241/1, தலவத்துகொட வீதி, ஹோகந்தர தெற்கு, ஹோகந்தர என்ற முகவரியில் உள்ள தொட்டாவத்தே டொன் மனுவல் பிரசாத் டி சில்வா இற்கு வழங்கப்பட்ட டொராண்டோ பொது மக்கள் 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல மாதம் 30 ஆந் திகதி முதல் இரத்துச் செய்யப்பட்டு, இரத்து செய்யப்பட்டுள்ளனர்.

ரங்கானி சாதிபிகா
சாண்டியாகோ.

05- 142

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ருவன்வெல்ல, அஞ்சல் கஹட்டகஸ்தென்ன, ரோஹனமாலி எனும் முகவரியில் வசிக்கும் பரணதலகே பிரேமசந்திர ஆகிய என்னால் மஹகிரில்ல உடகிரில்லயில் வசிக்கும் அத்தபத்து முதியன்சேலாகே சமன் திலக்கரத்ன என்பவருக்கு வழங்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு T.M.H.P.B. தென்னகோன் அவர்களினால் எழுதி சான்றுப்படுத்தப்பட்ட 21637 ஆம் இலக்கம் மற்றும் 2020.06.23 ஆந் திகதிய அற்றோணி அதிகாரப் பத்திரம் இன்று முதல் இரத்துச் செய்யப்பட்டு வலுவிழக்கச் செய்யப்பட்டுள்ளதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பரணதலகே பிரேமசந்திர.

05- 143

# ஏல விற்பனைகள்

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

ஆர்.எம்.ஏ. எஸ். ஆர்.கே. ரத்நாயக்க
கணக்கு இலக்கம் : 1063 5494 6874

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2020.09.24ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2020.10.29ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2020.10.19ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே எண்பத்தி ஐந்து இலட்சத்து மூவாயிரத்து இருநூற்று ஐம்பத்தி ஏழு ரூபா பதினான்கு சதம் (ரூபா 1,85,03,257.14) 2020, ஓகத்து 28 ஆந் திகதி முதல் இல. 4433 ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே அறுபத்தி மூன்று இலட்சத்து முப்பதாயிரம் ரூபா (ரூபா 1,63,30,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 3741 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2022.06.17 ஆந் திகதி பி.ப. 1.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹோவாகம் கோரளே பல்லே பத்துவின் கடுவலை மா நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவிற்குள் மற்றும் குமாரகேவத்த கிராம அலுவலர் பிரிவின் தலங்கமை கிராமத்தில் அமைந்த லேக் வீதி, வரிமதிப்பீட்டு இல. 43/1 ஐ ஏற்ற "தெல்காஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவை யாளர் ரீ. டீ. கே. ஆர். பீ. பத்தேகம என்பவரால் தயாரிக்கப்பட்ட 2017, செத்தெம்பர் 28ஆந் திகதியிடப்பட்ட இல. 6600 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1A எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : டைனகொரோ (பிரைவெற்) லிமிட்டெட் மற்றும் ஏனையோர் உரிமம் கோரும் சொத்து மற்றும் இல. 1278 எனும் வரைபடத்தின் லொட் 2; கிழக்கு: இல. 1278 எனும் வரைபடத்தின் லொட் 2 மற்றும் தனியார் வீதி ; தெற்கு: தனியார் வீதி இல. 1278 எனும் வரைபடத்தின் லொட் 9 மற்றும் எஃப். பெர்ணாண்டோ உரிமம் கோரும் சொத்து மற்றும் மேற்கிற்கு : எஃப். பெர்ணாண்டோ மற்றும் டைனகொரோ (பிரைவெற்) லிமிட்டெட் மற்றும் ஏனையோர் உரிமம் கோரும் சொத்து, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பத்தி ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 35பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 6600 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட 1A கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்:

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹோவாகம் கோரளே பல்லே பத்துவின் கடுவலை மா நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவிற்குள் மற்றும் குமாரகேவத்த கிராம அலுவலர் பிரிவின் தலங்கமை கிராமத்தில் அமைந்த லேக் வீதி, வரிமதிப்பீட்டு இல. 43/1 ஐ ஏற்ற "தெல்காஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ ஹெட்டிகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 1991, ஓகத்து 20 ஆந் திகதியிடப்பட்ட இல. 1278 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : எச். ஜீ. பீரிஸ் என்பவர் உரிமம் கோரும் காணி ; கிழக்கு : இங்கு லொட்கள் 2 மற்றும் 8 ; தெற்கு : லொட் 8 மற்றும் (20 அடி அகல வீதி) மற்றும் மேற்கு : லொட் 9 மற்றும் ஃபென்சினா பெர்ணாண்டோ உரிமம் கோரும் காணி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பத்தி ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 35பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1278 எனும் வரைபடத்திற்கு அமைவாக ஹோமாகமை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் B 1093/63 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இல. 1278 எனும் கூறப்பட்ட வரைபடத்தில் லொட்கள் 8 மற்றும் 9 என குறிப்பிடப்பட்ட வீதிக்கான ஒதுக்கத்தின் மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

05- 136

**டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீ**
**பகிரங்க ஏல விற்பனை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

அம்பாந்தோட்டை சிறைச்சாலை வீதி, 30 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள பெறுமதிமிக்க காணி

தென் மாகாணம், அம்பாந்தோட்டை மாவட்டம், மாகம்பற்று அம்பாந்தோட்டை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு, அம்பாந்தோட்டை கிராம அலுவலர் பிரிவு வாட் 3 அம்பாந்தோட்டை மாநகர சபை எல்லைக்குட்பட்ட 30 ஆம் இலக்கம் நியு ஸ்ரீட் என்னும் இடத்தில் அமைந்துள்ள காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் I. கோதம்கே அவர்களால் 2006, செத்தெம்பர் 20 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 4427 ஆம் இலக்க படத்தில் லொட் 1 என அடையாளமிடப்பட்ட காணி.

கடன்பட்டவறான அப்துல் றஹ்மான் முஹம்மது சில்மி என்பவர் DFCC வங்கி PLC (DFCC வர்தன வங்கி PLC யின் பின் உரிமையாளர்) சார்பாக நிறைவேற்றப்பட்ட 2019,மே 27 ஆந் திகதியிடப்பட்டு பிரசித்த நொத்தாரிசு T.தரங்கா ரன்மது அவர்களால் அத்தாட்சிப்படுத்திய 712 ஆம் இலக்க ஈட்டு முறி மீதான கொடுப்பனவை செலுத்தத் தவறியதால் DFCC வங்கி PLC எனக்கு வழங்கிய அதிகாரத்தின் கீழ் மேற்குறித்த ஆதனத்தை 2022ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதி காலை 11.30 மணிக்கு என்னால் பகிரங்க ஏல விற்பனை மூலம் அதே இடத்தில் வைத்து விற்பனை செய்யப்படும்.

சுகாதார அமைச்சினால் கொவிட் 19 நோய் சம்பந்தமாக வழங்கப்பட்ட வழிகாட்டலுக்கு அமைவாக இவ் ஏல விற்பனை நடத்தப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 2021.02.25ஆந் திகதி வெளியிடப்பட்ட இலங்கை அரசின் வர்த்தமானப் பத்திரிகையையும் 2021.02.09 ஆந் திகதி வெளியிடப்பட்ட "த அய்லன்ட்", "திவயின" மற்றும் 2021.02.10 ஆந் திகதி வெளியிடப்பட்ட "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்திற்குச் செல்லும் வழி**: அம்பாந்தோட்டை பஸ் நிலையத்திலிருந்து சிறைச்சாலை வீதி ஊடாக வைத்தியசாலை சந்தி வரை சென்று இன்னும் சில யார் தூரம் சென்றால் குறித்த ஆதனத்தை பாதையின் வலப்பக்கம் காணலாம்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்** : உத்தேசக் கொள்வன வாளர் ஏல முடிவில் பின்வரும் தொகையை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ;
(2) உள்ளூராட்சி மன்ற வரி (1%) ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் (2.5%) மற்றும் தரகு மீதான வரி;
(4) முழு விளம்பரச் செலவு ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுனர் கட்டணம் ரூபா 1500;
(6) நொத்தாரிசுக் கட்டணம் உறுதிப்படுத்தல் மற்றும் விற்பனை நிபந்தனைகள் ரூபா 3,000.

மிகுதி 90% கொள்வனவு விலை ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும். அத்துடன் இலங்கை அரசால் விதிக்கப்படும் ஏதேனும் நியதிச்சட்ட விதிப்பனவு வரி அல்லது கட்டணம் (இருப்பின்) ஆகியவற்றையும் சேர்த்து செலுத்துதல் வேண்டும்.

உறுத்துறுதி மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை பார்வையிட ரிலேசன்சிப் மனேஜர், மற்றும் அறவிடுதல் டீ.எவ்.சீ.சீ. வங்கி பீஎல்சீ, இல. 73, டபிள்யூ. ஏ. டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02. பார்வையிடவும் பெற்றுக் கொள்ளவும் முடியும்.

தொ. பே. இல. : 011-2371371.

பீ.கே.ஈ. சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளர் ,
மதிப்பீட்டாளர்,
பட்டய ஏலதாரர்.

134, பெத்தாகன வீதி, கோட்டை.
தொ. பே. இல.: 2873656, 0777- 672082.
தொலைநகல் இல.: 2871184.

05- 134

---

**டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீ**
**பகிரங்க ஏல விற்பனை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

பாமன்கடை, ஹம்டன் லேன், 23/8/2 ஆம் இலக்க வரிப்பணத்தைக் கொண்ட பெறுமதி மிக்க கூட்டாதன அலகு ஏல விற்பனை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை பள்ளேபத்து கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் மற்றும் பாமன்கடை மேற்கு கிராம அலுவலர் பிரிவு, வாட் இல. 46 ஹம்டன் லேன் , பாமன்கடை மேற்கில் அமைந்துள்ள கூட்டாதனம் உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. கனகலிங்கம் அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 2018, ஓகத்து 06 ஆந் திகதியிடப்பட்ட 5488 ஆம் இலக்க கூட்டாதனப் படத்தில் எட்டாவது மாடியில் 23, 8/2 ஆம் வரிப்பண இலக்கத்தைக் கொண்ட கூட்டாதனக்காணி EGB இல் அமைந்துள்ள கூட்டாதன கட்டிடத்தின் ஒரு அலகு.

கடன்பட்டவரான சந்திரசேகரம் விஷாகன் என்பவர் DFCC வங்கி (DFCC வர்தன வங்கி PLC யின் பின் உரிமையாளர்) சார்பாக பிரசித்த நொத்தாரிசு சரோஜினி முதலிகே அவர்களால் எழுதி அத்தாட்சிபடுத்திய 2019, மே 17 ஆந் திகதியிடப்பட்ட 3595 ஆம் இலக்க ஈட்டுமுறி மூலம் இவ் வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகைப் பணத்தை செலுத்தத் தவறியதால் 105.45 சதுர மீற்றர் (1135 சதுர அடி) நிலப்பரப்பைக் கொண்ட கூட்டாதன அலகு மற்றும் அக் கூட்டாதனத்துக்குரிய பொதுக் கூறுகளும் (elements) சேர்த்து (குறித்த கூட்டாதன ஆதன அலகு வரவேற்பறை, சாப்பாட்டு அறை, பிரதான குடியிருப்பாளர் அறை, 2 படுக்கை அறைகள், சமயலறை, 2 மலசலகூடம் மற்றும் மாடிமுகப்பு ஆகியனவற்றை கொண்டுள்ளது.) DFCC வங்கி PLC ஆல் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைய மேற்குறித்த ஆதனத்தை 2022ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு அதே இடத்தில் என்னால் விற்பனை செய்யப்படும்.

சுகாதார அமைச்சினால் கொவிட் 19 தொற்று நோய் சம்பந்தமாக வெளியிடப்பட்ட வழிகாட்டுதலை இறுக்கமாகக் கடைப்பிடித்து இவ் ஏல விற்பனை நடாத்தப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 2020, யூலை 10 ஆந் திகதியைக் கொண்ட இலங்கை வர்த்தமானப் பத்திரிகையையும் 2020, யூன் 29 ஆந் திகதியைக் கொண்ட "த ஐலண்ட்", "திவயின" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்திற்குச் செல்லும் வழி**: கோட்டையிலிருந்து கொழும்பு வெள்ளவத்தை A2 பெருந்தெரு ஊடாக ஏறத்தாழ 7 கி.மீ. வெள்ளவத்தை சந்தி வரை பயணித்து இடப்பக்கமுள்ள டபிள்யூ.ஏ.சில்வா மாவத்தையை அடையவும். இவ் மாவத்தையின் மூன்றாவது பாதையான வலப்பக்கமுள்ள ஹம்டன் லேனில் 100 மீற்றருக்கு அப்பாலுள்ள "ஹம்டன் றெசிடென்சிஸ்" எனப்படும் இக் கூட்டாதனம் இதன் இடப்பக்கத்திலுள்ள குறித்த வீடு 8 ஆவது மாடியில் அமைந்துள்ளது. இது வெள்ளவத்தை சந்தியிலிருந்து ஏறத்தாழ 0.5 கி.மீ. தூரமாகும்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம் :** உத்தேசக் கொள்வன வாளர் ஏல முடிவில் பின்வரும் தொகையை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ;
(2) உள்ளூராட்சி மன்ற வரி (1%) ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் (2.5%) மற்றும் தரகு மீதான வரி;
(4) முழு விளம்பரச் செலவு ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுனர் கட்டணம் ரூபா 1500;
(6) விற்பனையை உறுதிப்படுத்தும் நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 3,000 மற்றும் விற்பனையை உறுதிப்படுத்தலுக்கான முத்திரை வரி.

மிகுதி கொள்வனவு விலையின் 90% விற்பனை நடைபெற்று 30 நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும். அத்துடன் இலங்கை அரசால் விதிக்கப்படும் ஏனைய நியதிச்சட்ட விதிப்பனவு கட்டணம் வரி அறவீடுகள் அல்லது ஏனைய வரிகள்.

உறுத்துறுதி மற்றும் ஏனைய ஆவணங்களை பார்வையிட தொடர்பு கொள்ள வேண்டியது, ரிலேசன்சிப் மனேஜர், மறுசீரமைப்பு மற்றும் கடன் மீளப்பெறுதல் டீ.எவ்.சீ.சீ. வங்கி பீஎல்சீ, இல. 73, டபிள்யூ. ஏ. டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02. பார்வையிடவும் பெற்றுக் கொள்ளவும் முடியும்.

தொ. பே. இல. : 011-2371371.

பீ.கே.ஈ. சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளர் ,
மதிப்பீட்டாளர்,
பட்டய ஏலதாரர்.

134, பெத்தாகன வீதி, கோட்டை.
தொ. பே. இல.: 2873656, 0777- 672082.
தொலைநகல் இல.: 2871184.

05- 133

---

### பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப.வ. க.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை பள்ளே பற்று , பிட்டகோட்டே, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர நபை எல்லைகளுக்குள், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேச செயல-ாளர் பிரிவில், 522ஏ- பிட்டகோட்டே கிழக்கு கிராம அலுவலர் பிரிவு, பிட்டகோட்டே பத்தேகமையில் அமைந்துள்ளதும் பிட்டே-காட்டே, பத்தேகமை வடக்கு, தூவ வீதி, வரிமதிப்பு இல. 162/4ஏ தற்போதைய வரிமதிப்பு இல. 162/3 ஐக் கொண்டதும் "பெலென் கஹவத்தை" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ஹெட்டிகே அவர்களால் தயாரிக்கப்பட்டு 1994.03.14 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 1654 இல் துண்டு 1 என அடையாளமிடப்பட்டதுமான காணியினது) அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏலவிற்பனை.

( காணியின் விஸ்தீரணம்: 0ஏ.0றூ.29.5பே.)

(கடப்பாடுடையவரான/ஈடுவைத்தவரான ஜயந்த விக்கிரமசிங்ஹ குணசேக்கர, கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எம்.கே. சூரிஆரச்சி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2016.03.16 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 699 மற்றும் 2017.06 13 ஆந் திகதியிடப்பட்ட இரண்டாம் ஈட்டுமுறி இல. 1002 ஆகியவற்றின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை-தவறியுள்ளார்கள்)

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி**.- பிட்டகோட்டையிருந்து கோட்டே வீதி வழியே எத்துள் கோட்டே நோக்கி பங்களா சந்தி வரை ஏறக்குறைய 750 மீற்றர் சென்று, பத்தேகமை வீதியிற்கு வலப்பக்கம் திரும்பி ஏறக்குறைய 400 மீற்றர் சென்று, பத்தேகமை வடக்கு வீதிக்கு இடப்பக்கம் திரும்பி ஏற்க்குறைய 300 மீற்றர் சென்று, ஆதனத்திற்கு இட்டுச் செல்லும் வீதிக்கு வலப்பக்கம்

திரும்பி ஏறக்குறைய 100 மீற்றர் தொடர விற்பனைக்குரிய இவ் ஆதனம் வலப்பக்கத்தில் இருக்கின்றது.

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2022.06.10 ஆந் திகதி மு. ப.9.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2018.09.28 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2018.09.28 ஆந் திகதிய "த ஐலண்ட்", "திவயின" மற்றும் "தினக்குரல்"ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிபெற்ற கொள்வன வாளர் ஏல விற்பனை முடிவில் பின்வரும் தொகைகளை ஏலதார ருக்கு காசாக செலுத்த வேண்டும் :-

1. கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
2. உள்ளூர் அதிகாரசபை கட்டணங்கள் 1% மற்றும் அதே போன்று பெ.சே.வ. கட்டணங்கள் ;
3. ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2.5% (இரண்டரை வீதம்) ;
4. மொத்த விற்பனைச் செலவு மற்றும் ஏனைய கட்டணங்கள்;
5. விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தும் கட்டணம் ரூபா 7,000;

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்கு செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட எஞ்சிய தொகை மேற்குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10%ஐத் தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் " கொழும்பு 3, காலி வீதி, இல. 450, தலைமை அலுவலகம், பேன்ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. முகாமையாளர் அறவீடுகள்" அவர்களிடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011-4667218, 011-4667229.

துசித்த கருணாரத்ன,
நீதிமன்ற ஆணையாளர் மற்றும்
உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல. 182/3(50/3), விஹார மாவத்தை,
கொலன்னாவ,
தொலைபேசி: 011-3068185, 0714177199.

05- 130

## பேன் ஏசியா வங்கி பேங்கிங் கோப்பரேஷன் பீ.எல்.சீ .

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பகிரங்க ஏல விற்பனை

பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீ.எல்.சீ . யினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள கீழ்க்காணும் அதிகாரத்தின் பிரகாரம், கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆதனம் பின்வரும் திகதியில் பின்வரும் நேரத்தில் அவ்வாதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

மேல் மாகாணம்,(கம்பஹா பதிவுப் பிரிவிற்குள்) கம்பஹா மாவட்டம், சியனே கோரளை, மெத பத்துவ, கம்பஹா பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட, ஒருதொட்டதெற்கு,இல.235Aகிராமஅலுவலர் பிரிவு,ஒருதொட்ட கிராமத்தில் அமைந்துள்ள ஒருதொட்ட பாதை, வரிப்பண இல. 0614 இல் கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் சகலவற்றையும் உள்ளடக்கிய "தலுக்கஹலந்த" எனும் காணி, ( உரிமம் பெற்ற நில அளவையாளர் C.I. விக்கிரமநாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1968, சனவரி 06 ஆந் திகதிய வரைபட இல. 1/68 இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 இன் உப பிரிவாகும்) உரிமம் பெற்ற நில அளவையாளர் K.K.A.S. பத்மினி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1998, செத்தெம்பர் 30 ஆந் திகதிய வரைபட இல. 2063 இல் விபரிக்கப்பட்டு அடையாளம்மிடப்பட்ட பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டாகும்.

**(காணியின் விஸ்தீரணம்: 0ஏ. 0றூ.13பே.)**

**2022,யூன் 16 ஆந் திகதியன்று மு. ப. 10.00 மணிக்கு**

"கடப்பாடுடையவரான" பல்லேவத்த கமராலலாகே சரத் சிசிர குமார மற்றும் ராஜபக்ஷ ஆரச்சிகே குமுதுனி ராஜபக்ஷ மற்றும் "ஈடுவைத்தவரான" பல்லேவத்த கமராலலாகே சரத் சிசிர குமார ஆகியோர் பீகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ சார்பில் நீர்கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு T.L.M.T. விஜேசிங்ஹ அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018, யூன் 26 ஆந் திகதிய முதன்மை மிதக்கும் ஈட்டுமுறி இல. 378 மற்றும் 2019, யூன் 27 ஆந் திகதிய இரண்டாம் நிலை மிதக்கும் ஈட்டுமுறி இல. 600 ஆகியவற்றின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனர்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2022.04.08 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் "திவயின", "த ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்தை வந்தடைதல்.**- கம்பஹா கிளையின் பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ யிலிருந்து ஒருதொட்ட பாதையினூடாக சுமார் 2 கி.மீ. வரை வந்து விதான மாவத்தைக்கு இடது பக்கம் திரும்பும் போது சொல்லப்பட்ட ஆதனமானது பாதையின் வலது பக்கத்தை நோக்கி அமைந்துள்ளது.

**கொடுப்பனவு முறை.**- கீழ்க்காணும் விதத்தில் கொடுப் பனவுகள் ரொக்கப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

1. கொள்முதல் விலையில் 10%;
2. உள்நாட்டு இறைவரி மற்றும் வெட் வரி 1%;
3. ஏல விற்பனையாளர் கட்டணம் கொள்முதல் விலையில் 2.5% ( இரண்டரை வீதம்);
4. சகல பகிரங்கப்படுத்தல் செலவுகள்;
5. விற்பனை நிபந்தனை தொடர்பாக நொத்தாரிசு அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் ரூபா 3,500.00 ;
6. இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூபா 1,500.00 மற்றும் விற்பனைக்கான வேறு கட்டணங்கள்.

ஏல விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்முதலில் மிகுதி 90% பணத்தொகையை வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும். மேற்கூறிய பணத்தொகையானது 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறுமிடத்து செலுத்தப்பட்டுள்ள பணத்தொகையில் 10% ஐ இழக்க வேண்டி ஏற்படுவதுடன், அவ்வாதனத்தை மீள் விற்பனை செய்வதற்கு வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு: முகாமையாளர்- கடன் அறவிடுதல், பேன்ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் பீ.எல்.சீ., கொழும்பு -03. தொலைபேசி இலக்கங்கள்: 011- 4667227, 011-4667230.

எல்.பீ.சேனாநாயக்க,
மதிப்பீட்டாளர், உத்தரவுபெற்ற
ஏல விற்பனையாளர்
மற்றும் நீதிமன்ற
ஆணையாளர்.

இல.200, புதுக்கடை வீதி, கொழும்பு 12.
தொலைபேசி இல. : 011-2445393, 077-3242594.

05- 131

## ஏல விற்பனை அறிவிப்பை இரத்துச் செய்தல்
## செலான் வங்கி பீ.எல்.சீ. - ஹொரண கிளை

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க ( விசேட ஏற்பாடுகள்) வங்கிகளினால் கடன்களை மீளப்பெறும் சட்டத்தின் பிரிவு 09 இன் கீழ் ஏல விற்பனை தொடர்பில் 2022, ஏப்பிறல் 22 ஆந் திகதியன்று இல. 2277 பகுதி 1 பிரிவு 11B ஆம் பக்கம் இல.771 அரசாங்க வர்த்தமானியில் பிரசுரமாகியிருந்த ஏல விற்பனை தொடர்பான அறிவித்தலை இத்தால் நாங்கள் இரத்துச் செய்கிறோம்.

இதன் பிரகாரம் குறிப்பிட்டவாறு 2022, மே 16 ஆந் திகதியன்று ஏல விற்பனை நடாத்தப்பட மாட்டாது.

துசித்த கருணாரத்ன,
நீதிமன்ற ஆணையாளர் மற்றும்
உத்தரவுபெற்ற ஏல
விற்பனையாளர்.

T&H ஏல விற்பனை,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ.

தொலைபேசி: 011-3068185, 011-2572940.

05- 138

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.